**O.S.No.19 /2022**

பி.வா.சா.1 , திரு.முத்துராமலிங்கம்
நாள் : 21.11.2023 நேரம் : 01.00 P.M

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

1) தாவா சொத்து எனது தாயார் இருளாயி என்பவருக்கு பாத்தியமாக இருந்தது என்றால் சரிதான். 1 முதல் 4 வாதிகள் எனது உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். 5 முதல் 9 வாதிகள் இறந்துபோன எனது தம்பி முருகனின் வாரிசுகள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 1ம் வாதியின் மகள் என்றால் சரிதான்.

2) தாவா சொத்தை 1ம் பிரதிவாதிக்கு எனது தாயார் இருளாயி ரூ.80,000/-க்கு 5 வருட சங்கைக்கு ஒத்திவைத்தார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ல் தாவா சொத்து தனக்கு பூர்வீக பாத்தியம் என்று எனது தாயார் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1ல் 2வது பக்கத்தில் 3வது வரியில் ஒரு இடத்தில் மட்டும் ஒத்தி என்பதற்கு பதிலாக கிரையம் என்று தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டு என்றால் சரிதான். எனது தாயார் 1ம் பிரதிவாதிக்கு ஒத்தி தான் கொடுத்தார். ஒத்தி காலம் முதல் இன்று வரை ஒத்தி பாத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களை 1ம் பிரதிவாதி தான் அனுபவம் செய்து வருகிறார்.

3) தாவா ஒத்தி பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படாமல் உள்ளதா அல்லது பாகம் பிரிக்கட்டுவிட்டதா என்றால் எனது தாயார் உயிரோடு இருந்த காலத்தில் தாவா சொத்துக்களை எதுவேண்டுமானாலும் செய்துகொள் என்று என்னிடம் கூறிவிட்டார். தாவா சொத்துக்களை எனது தாயார் எனது உடன் பிறந்தவர்களின் சம்மதத்தோடு என்னிடம் ஒப்படைத்தாரா அல்லது தனது தனிப்பட்ட சொத்து என்பதால் எனது தாயார் மட்டும் என்னிடம் ஒப்படைத்தாரா என்றால் எனது தாயார் மட்டும் வாய்மொழியாக என்னிடம் தாவா சொத்துக்களை ஒப்படைத்துவிட்டார்.

4) எனது தாயார் தாவா சொத்துக்களை என்னிடம் ஒப்படைக்கும்போது எனது

உடன்பிறந்தவர்கள் யாரும் எனது தாயாருடன் இல்லை. நான் மட்டும் எனது தாயாருடன் அப்போது இருந்தேன். எனது தாயாருடனும், என்னுடனும் எனது உடன்பிறந்தவர்கள் பேச்சு வார்த்தையில் இல்லை. அதனால் தான் எனது தாயார் தாவா சொத்துக்களை என்னிடம் ஒப்படைக்கும்போது எனது உடன்பிறந்தவர்கள் யாரும் எங்களோடு இல்லை.

5) எனது எதிர்வழக்குரையிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ வாதிகள் இல்லாமல் எனது தாயார் மட்டும் தாவா சொத்துக்களை என்னிடம் ஒப்படைத்தார் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். 1ம் பிரதிவாதிக்கு ஒத்தி தொகை ரூ.80,000/—த்தை யாரும் செலுத்தவில்லை. 1ம் பிரதிவாதிக்கு செலுத்த வேண்டிய தொகையை வாதிகளும், நானும் சேர்ந்து செலுத்த வேண்டிய கடமை உள்ளது என்றால் எனக்கு பொதுக்குடும்பத்திலிருந்து வரவேண்டிய தொகை உள்ளது என்பதால் நான் எனது பங்கை செலுத்தவேண்டியதில்லை.

6) வாதிகள் ரூ.80,000/— தொகையை செலுத்தி தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதியிடமிருந்து மீட்பதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. ஒத்தி தொகையை பெற்றுக்கொண்டு ஒத்திதாரரான 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்களிலிருந்து வெளியேறுவதற்கு 1ம் பிரதிவாதிக்கு ஆட்சேபனை ஏதும் உள்ளதா என்றால், அதை 1ம் பிரதிவாதியிடம் தான் கேட்கவேண்டும்.

7)நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்களுக்கு ஆதரவாக எந்த ஒரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்காக 1ம் பிரதிவாதியிடம் நான் ஏதும் பணம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. எனது தாயார் மட்டும் தான் தாவா சொத்துக்கள் சம்மந்தமாக ஒத்தி தொகை பெற்றுள்ளார். ஒத்தி தொகையை வாதிகள் நீதிமன்றத்தில் செலுத்தி வைத்துள்ளதால் வழக்கை அனுமதிப்பதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இருக்கக்கூடியதில்லை என்றால் சரியல்ல.

8) 1ம் பிரதிவாதியை நீதிமன்றத்திற்கு வரவழைத்து சாட்சியாக விசாரிக்க நான் தயாராக இருக்கிறேனா என்றால் அதை 1ம் பிரதிவாதியிடம் தான் கேட்கவேண்டும். எனக்கும் வாதிகளுக்கும் ஏற்பட்டுள்ள வருத்தம் காரணமாக வாதிகளை எதிர்த்து வாதிகளை அழைக்கழிவு செய்யவேண்டும் என்ற நோக்கில் நான் வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. வாதிகளின் பிராது அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 01.25 P.M